

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.07.2024) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறையின் சார்நிலைப் பணியில் செயல் அலுவலர் நிலை1 பணியிடத்திற்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்வு செய்யப்பட்ட 10 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தர மோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், தலைமைப் பொறியாளர் பொ. பெரியசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை மின் கழக தொ.மு.ச. பொதுச் செயலாளர் பி.மணிமாறன், தொடர்ந்து ஐந்தாவது ஆண்டிலும் அப்பொறுப்பில் நீடிப்பதையொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றார்.

### பெரும் மழை காரணமாக - நீலகிரி மாவட்டத்தில்

# மீட்பு - நிவாரண நடவடிக்கைகள் குறித்து ஆய்வு!

### அமைச்சர் கா.ராமச்சந்திரன் - ஆ.ராசா எம்.பி. அதிகாரிகளுடன் பங்கேற்பு!

நீலகிரி, ஜூலை.25-

நீலகிரி மாவட்டத்தில், சுற்றுலாத்துறை கா.ராமச்சந்திரன் , நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா ஆகியோர் தலைமையில், தென்மேற்கு பருவமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், எடுக்கப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்தும் அரசுத்துறை அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

நீலகிரி மாவட்டம், உதகை, தமிழ்நாடு அரசு விருந்தினர் மாளிகையில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா ஆகியோர் தலைமையில், தென்மேற்கு பருவமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், எடுக்கப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்தும் அரசுத்துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நேற்று முன்தினம் (23.07.2024) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் ஃ பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர்தி.ந.வெங்கடேஷ், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில், சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் தெரிவித்ததாவது :

முதலமைச்சர் நீலகிரி மாவட்டத்தில் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை தொடர்ந்து கண்காணித்து, பல்வேறு உத்தரவுகளை வழங்கியுள்ளார்கள். அந்தவகையில் கடந்த சில நாட்களாக மாவட்டத்தில் பெய்த கன மழை மற்றும் காற்றின் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்ந்து கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மழை மற்றும் காற்றினால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடியாக கள ஆய்வு செய்து அரசுக்கு ஆய்வறிக்கை, மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் அனுப்பி வைக்க விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதுபோன்ற இயற்றை இடர்பாடுகள் ஏற்படும்போது, அனைத்துத்துறை அலுவலர்களும் தயார் நிலையில் இருந்து மீட்புபணிகளை உடனடியாக மேற்கொண்டு, பொது மக்களுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாத வண்ணம் பணியாற்ற வேண்டும். மேலும், அனைத்துத்துறை அலுவலர்களும் இது போன்ற பேரிடர் காலங்களில் ஒருங்கிணைந்து தங்களது பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

நீலகிரி மாவட்டத்தில் மழையின் காரணமாக பாதிப்புகள் ஏற்பட்டுள்ள கோக்கால், குட்டிமணி நகர், இத்தலார், போர்த்தி யாடா, மொட்டோரை ஆகிய பகுதிகள் நேரில் பார்வையிட்டு, எடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து துறை அலுவலர்களுடன் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தென்மேற்கு பருவமழையால் கிட்டத்தட்ட 101 வீடுகள் சேதமடைந்துள்ளது. சேதமடைந்த வீட்டிற்கு தலா ரூ.8,000/- வீதம் இதுவரை மொத்தம் ரூ.8.08 இலட்சம் அரசின் சார்பில் நிவாரணத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இதேபோல் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பயிர்சேதங்கள், தடுப்புச்சுவர் சேதங்கள் உள்ளிட்டவை குறித்தும் கணக்கெடுக்கப்பட்டு, உரிய நிவாரண பெற அரசுக்கு கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என சுற்றுலாத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா தெரிவித்ததாவது :

நீலகிரி மாவட்டத்தில், தென்மேற்கு பருவமழையால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து, சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களுடன் இணைந்து கடந்த 2, 3 நாட்களாக பல்வேறு இடங்களில் களஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த பேரிடர் காலத்தில், எந்த நேரத்திலும் களத்தில் தயார் நிலையில் இருந்து பணியாற்றிய அனைத்து அரசுத்துறை அலுவலர்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுடைய இந்த ஆக்கபூர்வமான பணிகளால் நீலகிரி மாவட்ட மக்கள் பயன்பெறுவார்கள் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமுமில்லை.

இந்த கூட்டம் நடைபெறுவதற்கு இரண்டு முக்கியமான காரணங்கள் என்னவென்றால், தென்மேற்கு பருவமழையால் ஏற்பட்ட சேதங்களுக்கான இழப்பீட்டுத்தொகையினை அரசுக்கு கருத்துரு மூலம் அனுப்பி நிவாரண தொகை பெறுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் இந்த பேரிடர் காலத்தில் நீலகிரி வாழ் பொதுமக்களுக்கு தமிழ்நாடு அரசு எந்தளவிற்கு உறுதுணையாக இருக்கிறது என்பதை தெரிவிக்கும் வகையிலும் இக்கூட்டம் அனைத்து அரசுத்துறை அலுவலர்களுடன் கூட்டம் நடைபெறுகிறது. மேலும், இந்த பேரிடர் மட்டுமல்ல எதிர்வரும் நவம்பர், டிசம்பர் பருவமழை தருணத்திலும் அனைத்து அரசு அலுவலர்களும் இதேபோல உத்வேகத்துடன் பணியாற்றிட வேண்டும்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களும், நானும் இணைந்து நீலகிரி மாவட்டத்தில், கடந்த சில நாட்களாக பெய்த கனமழையால் ஏற்பட்டுள்ள சேதங்களை கள ஆய்வு மேற்கொண்டோம். இந்த கனமழை மற்றும் காற்றினால் ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்தும், அதற்கு வழங்க வேண்டிய இழப்பீடுகள் தொடர்பாகவும், பயிர் சேதங்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பாகவும் கணக்கீடு மேற்கொள்வதற்காக இந்த ஆய்வுக் கூட்டம் இன்று மாவட்ட கண்காணிப்பு அலுவலர், மாவட்ட ஆட்சித்தலைவர் உள்ளிட்ட பல்வேறு அரசுத்துறை அலுவலர்களுடன் நடைபெற்றது.

தற்போது பெய்த தென்மேற்கு பருவமழை வழக்கத்தை விட அதிகளவில் பெய்த போதிலும் சேதங்கள் குறைவாக இருந்ததற்கு ஒரே காரணம் முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்தான். இருந்தபோதிலும் 01.06.2024 முதல் 22.07.2024 வரை பெய்த மழை மற்றும் காற்றின் காரணமாக மாவட்டத்தில் 97 வீடுகள் பகுதி சேதமும், 4 வீடுகள் முழுமையான சேதமும் அடைந்துள்ளது. அதேபோல், 32 இடங்களில் மண் சரிவும், 140 மரங்கள் விழுந்தும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இவை உடனடியாக அப்புறப்படுத்தி, பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் சரிசெய்யப்பட்டுள்ளது. தடுப்புச்சுவர் சுமார் 8 இடத்தில் விழுந்துள்ளது. அவற்றை சரிசெய்ய உரிய நிவாரணம் கோரப்படவுள்ளது.

இவ்வாறு ஆ.ராசா எம்.பி. செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

### திருக்கோயில்களுக்குச் சொந்தமான இடங்களை

# ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்!

### கிருஷ்ணகிரியில் - கள ஆய்வுக்குப் பின் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

கிருஷ்ணகிரி, ஜூலை 25 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (24.07.2024) கிருஷ்ணகிரி மாவட்டம், பாலேகுளி, பெருமாள் சுவாமி திருக்கோயில் மற்றும் பட்டாளம்மன் திருக்கோயில், நாகமங்கலம், நீலகிரி அனுமந்தராய சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு சொந்தமான இடங்களில் சில தனியார் நிறுவனங்கள் கிரானைட் கற்களை வெட்டி எடுத்தும், குவாரி கழிவுகளை கொட்டியும் உள்ள இடங்களை பார்வையிட்டு கள ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

கிருஷ்ணகிரி மாவட்டம், பாலேகுளி, பெருமாள் சுவாமி திருக்கோயில் மற்றும் பட்டாளம்மன் திருக்கோயில், நாகமங்கலம், நீலகிரி அனுமந்தராய சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு சொந்தமான இரண்டு ஏக்கருக்கு மேற்பட்ட இடங்களில் கடந்த காலத்தில் ஆக்கிரமிப்பு செய்து கிரானைட் கற்கள் வெட்டி எடுக்கப்பட்டுள்ளன. அதேபோல கிரானைட் குவாரி அமைந்திருக்கின்ற இடத்திற்கு அருகேயுள்ள திருக்கோயில் களுக்குச் சொந்தமான 7 ஏக்கர் நிலப்பரப்பில் வெட்டி எடுக்கப்பட்ட கற்கள் மற்றும் கிரானைட் குவாரி கழிவுகளை கொட்டி பயன்படுத்தி வந்துள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின் திருக்கோயிலுக்கு சொந்தமான இடங்களில் கிரானைட் கற்களை வெட்டி எடுத்தல் மற்றும் கழிவுகளை கொட்டுவது குறித்து வரப்பெற்ற புகார்களின் அடிப்படையில் திருக்கோயில் கள் மூலம் புகார் மனுக்கள் அளிக்கப்பட்டு காவல்துறை விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 2022 ஆம் ஆண்டு குவாரி வெட்டி எடுக்கப்பட்டது குறித்து தனியாக ஒரு புகார் அளிக்கப்பட்டது. தற்போது இந்த வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதால் ஏற்கனவே துறையின் சார்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அறிக்கையாக தாக்கல் செய்திருக்கின்றோம். அந்த அறிக்கையின் மீது தொடர் விசாரணை நடைபெற்று வருகின்ற ஜூலை 26 ஆம் தேதி வழக்கு நீதிமன்றத்தில் விசார ணைக்கு வரயிருக்கின்றது.

இந்நிலையில் கள நிலவரத்தை துறையின் அமைச்சர் என்ற முறையில் நானும், சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பா ளர், வருவாய், சுரங்கத்துறை மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்கள் நேரில் ஆய்வு செய்தோம். இந்த ஆய்வின் அறிக்கையானது நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை யின் போது சமர்ப்பிக்கப்படும். இதுபோன்ற முறைகேட்டில் யார் ஈடுபட்டிருந்தாலும், அவர்கள் எந்த பொறுப்பில் இருந்தாலும் உறுதியான நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளும். அதற்கு இந்து சமய அறநிலையத்துறை உறுதுணையாய் இருக்கும்.

அரசு புறம்போக்கு நிலங்களில் கல்குவாரிகள் அமைக்க ஏற்கனவே அனுமதி பெறப்பட்டுள்ள இடங்களுக்கு அருகிலுள்ள திருக்கோயிலுக்கு சொந்தமான நிலங்களை பாதைகளாக பயன்படுத்தி சேதப்படுத்தியும் கல்குவாரி கழிவுகளை கொட்டியும், விவசாயத்திற்கு பயன்படுத்த இயலாத நிலையை ஏற்படுத்தியுள்ளனர். 2014-2015 ஆம் ஆண்டில் இரண்டு ஏக்கர் 40 சென்ட் பரப்பிலான இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு பின்பு மணல் போட்டு மூடியிருக்கின்றா ர்கள். அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட இடங்களை கண்டறிந்து திருக்கோயில் சார்பில் சம்பந்தப்பட்டவர்களுக்கு உரிய நோட்டீஸ் வழங்கிய பின் அந்த இடங்களில் கற்களை அப்புறப்படுத்தி மணல் கொண்டு நிரப்பி இருக்கிறார்கள். இதுகுறித்து முழுமையாக விசாரணை செய்யப்பட்டு அதன்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த அரசு பொறுப்பேற்றபின் ரூ.6,075 கோடி மதிப்பிலான திருக்கோயில் சொத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும், நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் ரோவர் கருவியின் வாயிலாக திருக்கோயில் களுக்கு சொந்தமான 1,69,000 ஏக்கர் நிலங்கள் அளவீடு செய்யப்பட்டு எல்லைக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்காக வருவாய்த் துறையின் மூலம் 38 மாவட்டங்களுக்கும் வட்டாட்சியர்கள் நியமனம் செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. அதேபோல பட்டா பெயர் மாற்றங்கள், கணினியில் தவறுதலாக பெயர் மாற்றம் செய்யப்பட்ட பட்டாக்கள் தொடர்பாக வருவாய்த்துறையில் முறையீடு செய்யப்பட்டு திருக்கோயில்கள் பெயரில் பட்டா மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதோடு, திருக்கோயில்களுக்கு சொந்தமான ஆவணங்கள் சுமார் 4 கோடி பக்கங்கள் ஸ்கேன் செய்யப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் கே.எம்.சரயு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பெ.தங்கதுரை, இந்து அறநிலையத்துறை மண்டல இணை ஆணையர் அர.சுதர்சன், மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் ரஜினி செல்வம், கனிம வளத்துறை துணை இயக்குனர் முனைவர் பி.ஜெயபால் மற்றும் அலுவலர்கள் கலந்துக் கொண்டனர்.

### ரூ.52 கோடி மதிப்பீட்டில்

# திருத்தணி புறவழிச்சாலை அமைக்கும் பணி!

### திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, நேரில் ஆய்வு!

திருவள்ளூர், ஜூலை 25-

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி நகரில் நிலவும் போக்குவரத்து நெரிசலை தடுக்கும் வகையில் திருத்தணி புறவழிச்சாலை திட்டம் கொண்டுவரப்பட்டு. அதிமுக ஆட்சியில் கிடப்பில் போடப்பட்டது. இந்நிலையில் திமுக ஆட்சி வந்தவுடன் இதற்காக நெடுஞ்சாலைத் துறை சார்பில் முதலமைச்சரின் ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 52 கோடி மதிப்பீட்டில் சென்னைதிருப்பதி தேசிய நெடுஞ்சாலையிலிருந்து அரக்கோணம் சாலை சந்திப்பு (வள்ளியம் மாபுரம்) வரை 3.2 கிமீதூரம் சாலை அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டு விறுவிறுப்பாக சாலை அமைக்கும் பணி நடைபெற்று வந்தது.

புறவழிச்சாலைக்கு இடையில் ரயில்வே உயர் மட்ட மேம்பாலம் மற்றும் நந்தி ஆற்றின் இடையில் பாலம் அமைக்கும் பணிகளும் மற்றும் புறவழிச் சாலை சாலை அமைக்கும் பணிகளும் நிறைவு பெற்று வந்த நிலையில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம். எல்.ஏ நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது சாலையோரத்தில் மரக்கன்றுகளை நட்டுவைத்து பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகளுக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் சிக்னல் விளக்குகள், புறவழிச்சாலையில் ஒளிரும் மின் விளக்குகள். ஆகியவை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். இந்த ஆய்வின்போது திருத்தணி கோட்ட உதவிப் பொறியாளர் ரகுராமன், உதவி பொறியாளர் ஞான அருள்ராஜ். மற்றும் நெடுஞ்சாலைத் துறை அலுவலர்கள் கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.




### தமிழ்நாட்டில் - இராணிப்பேட்டையில்

# 9 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் வாகன உற்பத்தி!

### ஆயிரம் பேருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது!

இராணிப்பேட்டை, ஜூலை 25 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்தலைமையிலான திராவிட மாடல் அரசின் பல்வேறு நடவடிக்கைகளால், தமிழ்நாட்டில் முதலீடு செய்ய முன்னணி நிறுவனங்கள் பலவும் ஆர்வம் காட்டி வருகின்றன.

இந்நிலையில், ராணிப்பேட்டை மாவட்டத்தில் டாடாமோட்டார்ஸ்நிறுவனத்தின் வாகன உற்பத்தி தொழிற்சாலைஅமையவுள்ளதாகதொழில்துறைஅதிகாரிகள்தகவல் வெளியிட்டுள்ளனர்.

அடுத்த 5 ஆண்டுகளில், 9 ஆயிரம் கோடி முதலீட் டில் 5 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் வாகன உற்பத்தி தொழிற்சாலை அமைக்கப்பட உள்ளது.

இந்ததொழிற்சாலையில் ஜாகுவார், லேண்ட்ரோவர் கார்களை தயாரிக்க டாடா நிறுவனம் திட்டமிட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



நீலகிரி மாவட்டம், உதகை, தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா ஆகியோர் தலைமையில், தென்மேற்கு பருவமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், எடுக்கப்பட்டு வரும் மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்தும் அரசுத்துறை அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நேற்று முன்தினம் (23.07.2024) நடைபெற்றது. உடன் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் தி.ந.வெங்கடேஷ், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சுந்தரவடிவேல், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், மாவட்ட வன அலுவலர்கள் கௌதம், (உதகை), வெங்கடேஷ், (கூடலூர்), முதுமலை புலிகள் காப்பக கள இயக்குநர் அருண் உட்பட பலர் உள்ளனர்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் கொப்புடைய நாயகி அம்மன் கோயில் நிர்வாகத்திற்குட்பட்ட ரூபாய்ஒரு கோடியே 50 லட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்ட வாரச் சந்தையை சென்னையிலிருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்தார். கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நிகழ்ச்சியில் பங்கேற்றார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆசா அஜித், எஸ். மாங்குடி எம்.எல்.ஏ. காரைக்குடி நகர மன்ற தலைவர் எஸ்.முத்து துரை, துணை தலைவர் என்.குணசேகரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.